# <u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடியாத்தம்.</u>

முன்னிலை:– **இரா. சரண்யா, B.A.,LLB.,(Hons).,LLM.,**
நீதித்துறை நடுவர், குடியாத்தம்.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13ஆம் நாள் வெள்ளிக்கிழமை

## <u>ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 689/2025</u>
## <u>(C.N.R. No.TNVL11-011934-2025)</u>

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | – | மாநில அரசு காவல் ஆய்வாளர் மூலமாக<br>குடியாத்தம் நகர காவல் நிலையம்,<br>குற்ற எண். 276/2025 |
| குற்றம்சாட்டப்பட்டவர் | – | சுந்தரேசன் த/பெ. முனுசாமி |
| வனையப்பட்ட குற்றங்கள் | – | U/s. 4(1)(A), 4(1)(C) TNP Act |
| குற்ற நிகழ்வு நாள் | – | 14.09.2025 |
| தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | – | 14.09.2025 |
| எதிரி கைது செய்யப்பட்ட நாள் | – | 14.09.2025 |
| எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | – | 19.09.2025 |
| வழக்கு இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | – | 08.10.2025 |
| குவிமுச பிரிவு 240–இன் கீழ் எதிரியிடம் குற்றச்சாட்டு குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | – | 13.03.2026 |
| நீதிமன்ற வழக்கு விசாரணைக்கு விதிக்கப்பட்ட தடை குறித்த விவரம் | – | இல்லை |
| தீர்மானம் | – | எதிரி தாமாக முன்வந்து தனது குற்றத்தை எந்த கட்டாயமின்றி ஒப்புக்கொண்டதால் அவரை குற்றவாளி என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே எதிரியை பிரிவுகள் 4(1)(A), 4(1)(C) TNP Act–ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து பிரிவு 4(1)(A) TNP Act–ன் கீழான குற்றத்திற்கு 5 நாட்கள் மெய்காவல் சிறைதண்டையும், 4(1)(C) TNP Act–ன் கீழான குற்றத்திற்கு 5 நாட்கள் மெய்காவல் சிறைதண்டையும் மற்றும் 4(1)(A), 4(1)(C) TNP Act கீழான குற்றத்திற்கு ரூ.1000 அபராதம் விதித்தும் அபராதத்தை கட்ட தவறினால் 1 வாரம் மெய்காவல் சிறை தண்டனை விதித்து 248(2)–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கின் சிறை தண்டனையை எதிரி ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும், எதிரி |

| | | |
|---|---|---|
| | | இவ்வழக்கை பொறுத்து சிறையிலிருந்த நாட்களை பிரிவு 428(2)-ன் கீழ் அவரது தண்டனை காலத்தில் கழித்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து இருந்தால் அது மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு 13.03.2026 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை எண்.2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.V.வடிவேல்., அவர்கள் முன்னிலையாகியும் சாட்சிகளின் சாட்சியங்களையும் ஆவணங்களையும் பரிசீலித்தும், இறுதியாக 13.03.2026 ஆம் தேதி இறுதி விசாரணைக்கு வந்து இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

1. அரசுத் தரப்பு வழக்கு யாதெனில், கடந்த 14.09.2025ம் தேதி 7.00 மணிக்கு எதிரி சுந்தரேசன் த/பெ. முனிசாமி என்பவர் அவரது வீட்டினிடம் எவ்வித அரசு அனுமதியின்றி சுமார் 180மிலி அளவு கொண்ட EXPRESS SPECIAL BRANDY-6, GOLDEN EGAL DOCTOR BRANDY-2, BLACK PEARL BRANDY-3 என மொத்தம் 11 மதுபாட்டில்கள் வாங்கி விற்பனை செய்ய வைத்திருந்ததாக எதிரி மீது பிரிவு 4(1)(A), 4(1)(C) TNP Act-ன் கீழ் குற்றம் புரிந்துள்ளதாக குடியாத்தம் நகர காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 173(2)-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். பின்னிட்டு இவ்வழக்கானது நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, குற்றஞ்சாட்டப்பட்ட நபருக்கு அழைப்பாணை சார்வாக உத்தரவிடப்பட்டது.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானதும் வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு கு.வி.மு.ச.207-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டு, எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் எதிரி மீது பிரிவு 4(1)(A), 4(1)(C) TNP Act-ன் கீழ் குற்றச்சாட்டுகளை வனைந்து

அவருக்கு தமிழில் விளக்கி கூறியபோது எதிரி பொய் வழக்கு என்று கூறிவிட்டு வழக்கு விசாரணை நிலுவையில் இருந்த போது எதிரி தாமாக முன்வந்து தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

3. இவ்வழக்கில் எதிரி தாமாக முன்வந்து தனது குற்றத்தை எந்த கட்டாயமின்றி ஒப்புக்கொண்டதால் அவரை குற்றவாளி என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே எதிரியை பிரிவுகள் 4(1)(A), 4(1)(C) TNP Act-ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து பிரிவு 4(1)(A) TNP Act–ன் கீழான குற்றத்திற்கு 5 நாட்கள் மெய்காவல் சிறைதண்டையும், 4(1)(C) TNP Act–ன் கீழான குற்றத்திற்கு 5 நாட்கள் மெய்காவல் சிறைதண்டையும் மற்றும் 4(1)(A), 4(1)(C) TNP Act கீழான குற்றத்திற்கு ரூ.1000 அபராதம் விதித்தும் அபராதத்தை கட்ட தவறினால் 1 வாரம் மெய்காவல் சிறை தண்டனை விதித்து 248(2)–ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கின் சிறை தண்டனையை எதிரி ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும், எதிரி இவ்வழக்கை பொறுத்து சிறையிலிருந்த நாட்களை பிரிவு 428(2)-ன் கீழ் அவரது தண்டனை காலத்தில் கழித்துக்கொள்ள உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து இருந்தால் அது மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பு முழுவதும் என் மொழிதலுக்கிணங்க சுருக்கெழுத்து தட்டச்சரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 13ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

//உண்மை நகல்// R SARANYA Digitally signed by R SARANYA

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
குடியாத்தம்.